காரைக்கால் நகராட்சி

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

***

தேதி, 03/10/2023

## அறிவிப்பு

புதுச்சேரி தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் மற்றும் தெருவோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2017 மற்றும் தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் தெருவோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014 (மத்திய சட்டம் 7-2014) ன்படி நிரந்தர நகர வியாபார குழுவின் காரைக்கால் நகராட்சிக்குட்பட்ட 12 சாலையோர வியாபாரிகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு.

## அட்டவணை

| விபரம் | தேதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| வேட்பு மனு தாக்கல் தொடங்கும் நாள் | 16.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் | 20.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| வேட்பு மனுவின் இறுதி பரிசீலனை நாள் | 23.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| வேட்பு மனுவை வாபஸ் பெற கடைசி நாள். | 24.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் நாள். | 25.10.2023 | காலை 10.00 மணி | காரைக்கால் நகராட்சி அலுவலக் கருத்தரங்கு கூடம், காரைக்கால். |
| தேர்தல் நடைபெறும் நாள் | 03.11.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை | காரைக்கால் நகராட்சி அலுவலக் கருத்தரங்கு கூடம், காரைக்கால். |
| தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நாள் | 03.11.2023 | மாலை 5.00 மணி | காரைக்கால் நகராட்சி அலுவலக் கருத்தரங்கு கூடம், காரைக்கால். |

மேலும் விபரங்களுக்கு காரைக்கால் நகராட்சி NULM அலுவலகத்திலும், தொலைபேசி எண். 04638 - 220427 மூலமாகவும், காரைக்கால் நகராட்சி இணையதளம் www.kklmun.in வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம்.

KARAIKAL MUNICIPALITY NULM

(ரா. செல்லமுத்து)

தேர்தல் நடத்தும் அதிகாரி

# காரைககால நகராடசி
## தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
### நகர சாலையோர விற்பனைக்குழு (Street Vendors Town Vending Committee)

****

அன்புடையீர்.

"தெருவோர வியாபாரிகளின் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் தெருவோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014 (The Street Vendors (Protection of livelihood and regulation of street vending Act, 2014 ன் படி சாலையோர வியாபாரிகளை காரைக்கால் நகராட்சி மூலம் கணக்கெடுத்து பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் செய்ய உத்தேசித்துள்ளது. இதன்படி கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 157 சாலையோர வியாபாரிகளை கண்டறிந்து காரைக்கால் நகராட்சி மூலம் அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தொகுதிவாரியாக விபரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண். | தொகுதி | வியாபாரிகளின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1. | வடக்கு தொகுதி | 15 | 15 | 30 |
| 2. | தெற்கு தொகுதி | 79 | 48 | 127 |
| | **Total** | **94** | **63** | **157** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 157 சாலையோர வியாபாரிகள் பெயர் மற்றும் விபரங்கள் காரை நகராட்சி NULM அலுவலகத்திலும் காரைக்கால் நகராட்சி இணையதளம் www.kklmun.in வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம்.

தற்போது தற்காலிக நகர விற்பனை குழு (Provisional Town Vending Committee) இயங்கிக்கொண்டு இருக்கிறது. இதனை நிரந்தர நகர விற்பனைக் குழுவாக (Permanent Town Vending Committee) யாக மாற்றுவதற்கு 12 பிரதிநிதிகளை சாலையோர வியாபாரிகளிலிருந்து தேர்வு செய்யப்படவேண்டும். இதை தேர்தல் வைத்து முறையாக தேர்ந்தெடுக்க காரைக்கால் நகராட்சி உத்தேசித்துள்ளது. தொகுதி வாரியாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் விபரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண். | ஒதுக்கீடு | மொத்த இடங்கள் | வடக்கு தொகுதி | தெற்கு தொகுதி |
|---|---|---|---|---|
| 1. | பொது | 3 | 1 | 2 |
| 2. | பொது(பெண்கள்) (Women) | 2 | 1 | 1 |
| 3. | பிற்படுத்தபட்டோர் | 2 | - | 2 |
| 4. | பிற்படுத்தப்பட்டோர் (பெண்கள்) | 1 | 1 | - |
| 5. | அட்டவணை இனத்தவர் | 1 | - | 1 |
| 6. | அட்டவணை இனத்தவர்(பெண்கள் ) | 1 | - | 1 |
| 7. | ஊனமுற்றோர் | 1 | - | 1 |
| 8. | சிறுபான்மையினர் | 1 | - | 1 |
| | **Total** | **12** | **3** | **9** |

Scanned with OKEN Scanner

தேர்தல் முக்கிய தேதிகள்:

| அட்டவணை | தேதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| வேட்பு மனு தாக்கல் தொடங்கும் நாள் | 16.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள்: | 20.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| வேட்பு மனுவின் இறுதி பரிசீலனை நாள் | 23.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| வேட்பு மனுவை வாபஸ் பெற கடைசி நாள். | 24.10.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் |
| இறுதி வேட்பாளர் பட்டியல்அறிவிக்கப்படும் நாள். | 25.10.2023 | காலை 10.00 மணி | காரைக்கால் நகராட்சி அலுவலகக் கருத்தரங்கு கூடம், காரைக்கால். |
| தேர்தல் நடைபெறும் நாள் மற்றும் | 03.11.2023 | காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை | காரைக்கால் நகராட்சி அலுவலகக் கருத்தரங்கு கூடம், காரைக்கால். |
| தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நாள் | 03.11.2023 | மாலை 5.00 மணி | காரைக்கால் நகராட்சி அலுவலகக் கருத்தரங்கு கூடம், காரைக்கால். |

குறிப்பு :

1. தேர்தல் நடக்க இருக்கும் இடம் காரைக்கால் நகராட்சி அலுவலக கருத்தரங்கு கூடம், காரைக்கால்.

2. மேலே குறிப்பிடப்பட்ட 12 உறுப்பினர்களுக்கு போட்டியிட விரும்புவோர் மற்றும் வாக்காளர்கள் காரைக்கால் நகராட்சியால் வழங்கப்பட்டதெருவோர வியாபாரிகளுக்கான சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

3. தேர்தலில் பங்கேற்க ஆர்வமுள்ள சான்றளிக்கப்பட்ட தெருவோர விற்பனையாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் லில் தங்களது விற்பனை சான்றிதழ் அல்லது அடையாள அட்டையை காண்பித்து வேட்பு மனு படிவம் 1-ஐ பெற்றுக்கொள்ளலாம்.

4. பூர்த்தி செய்யப்பட்டவேட்பு மனுவை கையொப்பமிட்டு காரைக்கால் நகராட்சி தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. R.செல்லமுத்து, தாசில்தார், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால் அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரில் தாக்கல் செய்து ஒப்புகை இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். வேட்புமனுவுடன் டெபாசிட் தொகையாக ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) த்துக்கான தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் வரையோலையை (Demand Draft) ''**The Commissioner Karaikal Municipality**'' என்ற பெயரில் எடுத்து தவறாமல் இணைத்திடல் வேண்டும். வேட்புமனு தாக்கல் செய்வதற்கு கடைசி நாள் **20/10/2023** ஆகும்.

5. இத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவை தாக்கல் செய்யும் சாலையோர வியாபாரியை அதே தொகுதியை சார்ந்த இரு சாலையோர வியாபாரிகள் முன்மொழிய வேண்டும்.

Scanned with OKEN Scanner

6. மேற்குறிப்பிட்ட டெபாசிட் தொகை திரும்பப்பெறத்தக்கதாகும் (Refundable) போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலில் பதிவாகும் வாக்குகளில் ஆறில் ஒரு பங்கு வாக்குகள் பெறவில்லை எனில் வேட்பாளர் செலுத்திய டெபாசிட் தொகை திரும்ப வழங்கப்படமாட்டது

7. தேர்தலில் போட்டியிட விரும்புவோர் அவரவர்கள் வியாபாரம் செய்யும் சட்டமன்ற தொகுதியில் தான் போட்டியிட வேண்டும்.

8. தேர்தலில் போட்டியிட விரும்புவோர் அதே சட்டமன்றதொகுதியை சேர்ந்த காரைக்கால் நகராட்சியால் சான்றளிக்கப்பட்ட ஒரு தெருவோர வியாபாரியை தேர்தல் முகவராக/வாக்கு எண்ணும் முகவராக நியமிக்கலாம்.

9. தேர்தல் நாளன்று வாக்களிக்க வருபவர்கள் காரைக்கால் நகராட்சியால் வழங்கப்பட்ட வியாபார சான்றிதழ் அல்லது அடையாள அட்டையை தவறாமல் எடுத்து வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு காரைக்கால் நகராட்சி NULM அலுவலகத்திலும், தொலைபேசி எண். 04638 - 220427 மூலமாகவும், காரைக்கால் நகராட்சி இணையதளம் www.kklmun.in வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம்.

(ரா. செல்லமுத்து)
தேர்தல் நடத்தும் அதிகாரி

பெறுனர்:

1. திரு./திருமதி.

காரைக்கால்.